ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2239/44 - 2021 අගෝස්තු මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.08.05
2239/44 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பி. 5/ 83 II

**1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைக்கொல்லிகள் கட்டுப்படுத்தல் சட்டம்**

1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைக்கொல்லிகள் கட்டுப்படுத்தல் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ், கமத்தொழில் அமைச்சரின் அங்கீகாரத்துடன் பீடைக்கொல்லிகள் தொழில்நுட்ப மற்றும் மதியுரைக் குழுவினால் ஆக்கப்பட்ட விதிகள்.

பீடைக்கொல்லிகள் தொழில்நுட்ப மற்றும் மதியுரைக் குழு கட்டளைக்கிணங்க,

கலாநிதி **ஜே. ஏ. சுமித்,**
செயலாளர்-பீடைக்கொல்லிகள்
தொழில்நுட்ப மற்றும் மதியுரைக் குழு.

பேராதனை,
2021, யூன் 21.

**விதிகள்**

1. இவ்விதிகள் 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பீடைக்கொல்லிகளை கட்டுப்படுத்தல் (பீடைக்கொல்லி தொழில்நுட்ப மற்றும் மதியுரைக் குழு) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. பீடைக்கொல்லிகள் பதிவாளர் (இதனகத்துப் பின்னர் “குழு” எனக் குறிப்பீடு செய்யப்படும்). பீடைக்கொல்லி தொழில்நுட்ப மற்றும் மதியுரைக் குழுத் தவிசாளரின் பணிப்புக்களின் கீழ் குழுக் கூட்டங்களைக் கூட்டுதல் வேண்டும்.

3. குழுவின் கூட்டங்கள் ஆகக்குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையேனும் நடைபெறுதல் வேண்டும் என்பதுடன் குழுக் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் எட்டு உறுப்பினர்களாதல் வேண்டும்.

1A — G 34783 - 70 (2021/08)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

4. குழுத் தவிசாளர் அறிவித்தல் சேர்ப்பித்தல் அவசியமாக உள்ளதெனக் கருதுமிடத்து அவ்வறிவித்தல் எந்நாளன்று சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்நாள் புறநீங்கலாக, ஆனால் அத்தகைய அறிவித்தல் எந்நாளன்று வழங்கப்படுகின்றதோ அந்நாள் உட்பட உறுப்பினர்களுக்கு ஆகக்குறைந்தது பத்துநாட் கால அறிவித்தல் கொடுத்த பின்னர் எந்நேரத்திலும் அவர் அவ்வாறு கூட்டம் ஒன்றைக் கூட்டும்படி கோரலாம். அத்தகைய அறிவித்தலானது கூட்டத்தின் நேரத்தையும், இடத்தையும் மற்றும் விசேட அலுவலின் விடயத்தில் அந்த அலுவலின் பொதுவான தன்மையையும் குறித்துரைத்தல் வேண்டும்.

5. குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதரத் தவறுகின்ற குழுவின் எவரேனும் உறுப்பினர் குழுவின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிதல் வேண்டும்.

6. குழுவின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கருமங்களும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்கின் மூலம் முடிவு செய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாக இருக்கும் பட்சத்தில் அத்தகைய தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் உறுப்பினர் அவரது வாக்குடன் சேர்த்து அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

7. தவிசாளர் குழுவின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்குதல் வேண்டும். குழுவின் ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர் வருகை தராது இருக்கையில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட்டத்திற்கு தலைமை தாங்குதல் வேண்டும்.

8. குழுவின் உறுப்பினர் எவரும் குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டிய ஏதேனும் கருமம் பற்றி கலந்துரையாடப்பட்ட அல்லது முடிவு செய்யப்பட்ட எதனையும் வெளியிடுதல் ஆகாது.

9. குழுவின் செயல், முடிவு அல்லது நடவடிக்கைகள் எதுவும் அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளமை காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக்கப்பட்டதாகக் கருதப்படலாகாது.

10. குழுவின் செயலாளர், முடிவு செய்யப்படுவதற்காகக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஒவ்வொரு கருமம் பற்றிய மற்றும் குழுக் கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புக்கள் பற்றிய பதிவேடுகளை வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

11. குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும், குழுவின் உறுப்பினர் ஒருவராக அவரது பணிகள் அவரால் நிறைவேற்றப்படுவதனை பங்கமான முறையில் பாதிக்கக்கூடியவாறான நிதிசார் அல்லது வேறு அக்கறை எதனையும் தான் கொண்டிருக்கவில்லையென வெளிப்படுத்துதல் வேண்டும்.

12. குழுவினால் தீர்மானிக்கப்படுவதற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டிய ஒவ்வொரு கருமம், விடயப் பொருள் பற்றிய முழுமையானதும் திட்பமானதுமான கூற்றொன்றுடன் செயலாளருக்கு எழுத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவர் அதனை குழுத் தவிசாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

13. குழுவின் முடிவானது குழுவின் அங்கீகாரத்துடன் பீடைக்கொல்லிகள் பதிவாளரினால் இயைபான திருத்தங்களுக்கு எழுத்தில் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

08-252